## தமிழ் வகுப்பேடு

**வகுப்பு : பத்து 1. உரைநடையின் அணிநலன்கள் (துணைப்பாடம்)**

### குறிப்புச்சட்டகம் :

- முன்னுரை
- இருவேறு மனிதர்கள் சந்திப்பு
- அன்றும் இன்றும்
- உவமை , உருவகம்
- இணைஒப்பு
- இலக்கணை
- மோனை , எதுகை
- ஏதிரிணை இசைவு
- உச்சநிலை
- முடிவுரை

### முன்னுரை :

சங்கத் தமிழனும் , இன்றைய தமிழனும் சந்தித்துக் கொண்டால் என்ன பேசிக் கொள்வார்கள் ? அதிலும் அவர்களின் பேச்சு இலக்கியம் பற்றியதாக இருந்தால் எப்படி இருக்கும் ? என்பதின் எழுத்து வடிவம் தான் இக்கட்டுரை டாக்டர் எழில் முதல்வன் எழுதிய "புதிய உரைநடை" என்ற நூலினைத் தழுவி இப்பகுதி அமைந்துள்ளது.

### இருவேறு மனிதர்கள் சந்திப்பு :

சங்கப் புலவர் ஒருவர் இயற்கை நிறைந்த சூழலில் ஓலைச் சுவடியில் எழுதிக் கொண்டிருக்கிறார். அவர் முன் சிறிய கால இயந்திரம் ஒன்று தோன்றியது. அதிலிருந்து இன்றைய இணைய தமிழர் ஒருவர் இறங்கி வருகிறார். ஒரு மணிநேரம் மட்டுமே என்னால் உங்களுடன் இருக்க முடியும். அதற்குள் சங்க காலம் தொடங்கி இக்காலம் வரையுள்ள இலக்கியம் குறித்து பேசலாமா? என்கிறார். உரையாடல் நிகழ்கிறது.

### அன்றும் , இன்றும் :

சங்க காலத்திற்கு பின் தமிழ் இலக்கியம் அற இலக்கியமாக , காப்பியமாக , சிற்றிலக்கியமாக , சந்தக் கவிதையாக ,

புதுக்கவிதையாக மாறியுள்ளது. சிறுகதை , கட்டுரை , புதினம் இவையெல்லாம் எங்கள் கால இலக்கியம் என்றான் இணையத் தமிழன்.

### உவமை , உருவகம் :

சங்க பாடல்களில் வருவது போன்ற உவமை , உருவகங்கள் இக்காலத்திலும் உள்ளன. "திருப்பரங்குன்றத்தின் அழகை பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த " என்ற வரிகளையும் , "முக நிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன" என்ற உருவகத்தையும் எழுதுகிறார்கள்.

### இணை ஒப்பு அழகு :

உவமைக்கும் , பொருளுக்கும் இடையில் உவமை உருபு இல்லாதது எடுத்துகாட்டு உவமையணி ஆகும். உரைநடையில் இதை இணைஒப்பு என்பர்.

ஊர்கூடி செக்கு தள்ள முடியுமா? என்கின்றனர். புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை என்ற வரிகள் இணை ஒப்பிற்கு சிறந்த எடுத்துகாட்டாகும்.

### இலக்கணை :

கேட்காத பொருளை கேட்பன போலவும் , பேசாத பொருளை பேசுவன போலவும் , கூறுவது செய்யுள் மரபாகும். இதை உரைநடையில் 'இலக்கணை' என்பர். இதற்கு எடுத்துகாட்டாக "சோலையில் புகுவேன். மரங்கள் கூப்பிடும் . விருந்து வைக்கும். ஆலமர நிழலில் அமர்வேன்" என்ற திரு.வி.க வரிகளை கூறலாம்.

### மோனையும் , எதுகையும் :

மோனையும் , எதுகையும் செய்யுளுக்கு ஓசை இன்பம் தரும். அதைப் போலவே சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை தனது நூலில் 'தென்றல் அசைந்து வரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம். மலைவளம் படைத்த பழம்பதியாகும்'. என்று அழகாக நவில்கிறார்.

### எதிரிணை இசைவு :

எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவது எதிரிணை இசைவு ஆகும். தோழர் ப. ஜீவானந்தம் இதனை

“குடிசைகள் ஒருபக்கம் ; கோபுரங்கள் மறுபக்கம் ; பசித்த வயிறுகள் ஒரு பக்கம்” என்று அழகாக உரைத்துள்ளார்.

உச்சநிலை :

கருத்தையோ , சொல்லையோ அடுத்தடுத்து வைக்கும் முறையின் சிறப்பு உச்சநிலை ஆகும் . “இந்தியா தான் என்னுடைய மோட்சம். இந்தியா தான் என் இளமையின் மெத்தை”. என்ற பாரதியின் வரிகளை கூறலாம்.

முடிவுரை :

‘என்றும் உள தென்தமிழ்’ என்றார் கம்பர். தமிழ் காலந்தோறும் பல வகையிலும் வளர்ந்து வருகிறது. செய்யுள் நடையைப் போன்றே உரைநடையிலும் பல உத்திகளை இக்காலத்தில் கையாண்டு தமிழ் அன்னைக்கு அழகு சேர்க்கிறார்கள் என்பதை இப்பகுதி எடுத்தியம்புகிறது.

## இயல் 2. காற்றே வா! (செய்யுள்)

- பாரதியார்

பின்வரும் செய்யுள் வரிகளைப் படித்து அதனை தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி :

“எமது உயிர் நெருப்பை நீடித்து நின்று நல்லொளி தருமாறு நன்றாக வீசு”.

1.இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் பாரதியார் கவிதைகள் ஆகும்.

2.இப்பாடலாசிரியர் எவ்விதழ்களில் பணியாற்றினார்?

இப்பாடலாசிரியர் இந்தியா , சுதேசமித்திரன் ஆகிய இதழ்களில் பணியாற்றினார்.

3. இப்பாடலாசிரியர் எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறார்?

இப்பாடலாசிரியர் சிந்துக்கு தந்தை , செந்தமிழ் தேனீ , பாட்டுக்கொரு புலவன் என்றெல்லாம் போற்றப்படுகிறார்.

4. கவிதை படைக்கும் இடங்களில் தடையாக இருப்பது எது?

கவிதை படைக்கும் இடங்களில் தடையாக இருப்பது யாப்பு இலக்கணம் ஆகும்.

5. மயலுறுத்து - பொருள் தருக.

மயலுறுத்து - மயங்கச்செய்

விடையளி :

1.காற்று என்னும் தலைப்பில் அமைந்த பாரதியாரின் வசனக் கவிதையை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

காற்றே வா! என பாரதி விளித்து கூறுவன :

- பூக்களில் உள்ள மகரந்த தூளை சுமந்து கொண்டு வா!
- எம்மனதை மயங்க செய்கின்ற இனிய வாசனையுடன் வா!
- இலைகளின் மீதும் , நீரலைகளின் மீதும் உராய்ந்து எங்களுக்கு தேவையான உயிர்வளியை கொண்டு வந்து தா!
- எமது உயிராகிய நெருப்பை நீடிக்க செய்து நல்லொளி தருமாறு நன்றாக வீசு!
- ஆற்றல் குறைந்து போய் அதனை குளிர்வித்து விடாதே.
- பேய் போல வீசி உயிரை மடித்து விடாதே.
- மெதுவாக நின்று சீராக நீண்ட காலம் வீசிக் கொண்டிரு.
- உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்.
- உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
- உன்னை வழிபடுகின்றோம்.

*****************************************************